DJRD-2-TA

# இயேசு மரணத்தில் இருந்து உயிர்த்தாரா? நிகழ்ச்சி 2

**அறிவிப்பாளர்:** இன்றைக்கு உலக பிரசித்திபெற்ற முன்னணி சித்தாந்த நாத்திகரான Dr. ஆண்டனி ப்ளூ மற்றும் ஆக்ஸ்போர்ட் பல்கலைகழகத்தின் முன்னாள் பேராசிரியரும் கிறிஸ்தவ சிந்தாந்தமேதையும் வரலாற்றாலருமான Dr. கேரி ஹேபர்மசுக்கும் இடையிலான விவாதத்தை பார்க்கும்படி உங்களை வரவேற்கிறோம், இவர் தற்போது லிபர்டி பல்கலைகழகத்தில் சித்தாந்தத்தின் பிரிவினுடைய தலைவராக இருக்கிறார், இன்றைய தலைப்பு, “இயேசு மரணத்தில் இருந்து உயிர்த்தாரா?”

**Dr. ஆண்டனி பிழு** இல்ல. நா என்ன கேட்க விரும்புகிறேன் என்றால் உண்மையா பவுல் என்னத்தை பார்த்தார். தான் கண்டது உயிர்த்தெழுந்த கிறிஸ்துதான் என்று எதை வைத்து சொல்லுகிறார். ஆனா அவன் அங்கு எப்படி அதை பார்த்தான் ஏன் அவனோடு இருந்தவர்களாக உயிர்த்தெழுந்த இயேசுவை அப்ப பார்க்க முடியல வேறு ஏதும் நடக்கலையே.

**Dr. கேரி ஹேபர்மாஸ்** சீஷர்கள் உயிர்த்தெழுந்த இயேசுவை பார்த்ததாக நினைக்கிறார்கள் என்பதை எல்லா விமர்சகர்களும் ஏற்றுகொள்ளுகிறார்கள். இது என்ன பிரச்சனை. சீஷர்கள் உயிர்த்தெழுந்த இயேசுவை தான் பார்த்தார்கள் என்றால், மன பிரம்மைக்கு அங்க இடமில்லை, அந்த மாதிரி ஒன்று நடக்க அங்க வாய்ப்பு இல்லை. இது ஒரு மறுக்க முடியாத நிகழ்வு என்று எல்லாருக்கும் தெரியும்.

**Dr. ஆண்டனி பிழு** இதுக்கு என்ன பேறு பொருந்துன்னு எனக்கு தெரியல. இதுல புரியாத விஷயம் என்னன்னா அங்க ஏதாவது பார்க்கும்படியாக இருந்துச்சா, அது மன பிரம்மையா இல்லையா, அதை என்னன்னு சொல்றது மன பிரம்மையா தரிசனமா இல்ல வேற என்னன்னு சொல்றது.

**Dr. கேரி ஹேபர்மாஸ்** பவுல் என்ன சொல்றார். அது மன பிரம்மை இல்லை.

**Dr. ஆண்டனி பிழு** அது அவரோட இருந்தவங்களால பார்க்க முடியலைன்னா, அது மாம்ச சரீரமாக இருந்திருக்க முடியாதே.

**Dr. கேரி ஹேபர்மாஸ்** அவன் கூட இருந்தவங்களால பார்க்க முடியலைன்னு யார் சொன்னது.

**அறிவிப்பாளர்:** கிறிஸ்துவம் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலில் தான் நிலை நிற்கிறது. கிறிஸ்து மரணத்தில் இருந்து உயிர்த்திருந்தால், கிறிஸ்தவம் உண்மையானதாக இருக்கும். அப்படி இல்லாவிட்டார், கிறிஸ்தவம் பொய்யாக இருக்கும். அப்போஸ்தலனாகிய பவுல் எழுதுகிறார், கிறிஸ்து உயிர்த்தெழாவிட்டால், உங்கள் விசுவாசம் விருதாவாய் இருக்கும், உங்கள் பிரசங்கமும் வீணாயிருக்கும், நீங்க உங்கள் பாவங்களிலேயே தரித்திருப்பீர்கள்.

****

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** வணக்கம். இன்றைக்கு நாம் விவாதித்துகொண்டு இருக்கும் தளிப்பு, இயேசு மரணத்தில் இருந்து உயிர்த்தெழுந்தாரா? அருமையான இரண்டு விருந்தினர்களோடு பேசிக்கொண்டு இருக்கிறோம். Dr. ஆண்டனி ப்ளூ, உலகின் முன்னணி சித்தாந்த நாத்திகராக கருதப்பட்டு வருகிறார். மேலும் Dr. கேரி ஹேபர்மாஸ், இவர் கிறிஸ்தவ சித்தாந்தன் மற்றும் வரலாற்றாளர், இவர் இயேசுவின் உயிர்த்தெழுதல் குறித்த ஆவணங்களை நிரூபிப்பதில் சிறந்தவராக கருதபடுகிறார்.

மேலும், நீங்க இங்க வந்ததற்காக உங்களை பாராட்டுகிறேன். இப்ப நாம நேரடியா இந்த விஷயத்தோடு முக்கிய பகுதிய பார்க்கலாம்: இயேசு வாழ்ந்தார் என்பதற்கு நம்மிடம் சரித்திர சான்றுகள் இருக்கிறதா? அவர் சிலுவையில் தான் மரித்தாரா? சீஷர்கள் என்ன ஆனார்கள்? தாங்கள் உயிர்த்தெழுந்த இயேசுவைத்தான் கண்டோம் என்று நம்புவதை போன்ற அனுபவங்களை பெற்றார்களா? நீங்க நான்கு உண்மைகளை சொல்றீங்க, Dr. ஹேபர்மாஸ், நீங்க தான் அதை சொன்னீங்க, போன நிகழ்ச்சியில் சொன்ன 12 உண்மைகளில் இதுவும் இருக்குது, இந்த உண்மைகளை சரித்திர விமர்சகர்கள் கூட ஏற்றுகொள்றாங்க இல்லையா. இதைவிட அதிகமான ஆதாரங்களும் இருக்கு. நமக்கு ஏதாவது ஆதாரம் வேணும் இல்லையா. ஆனா முதல்ல சொல்லுங்க, அந்த உண்மைகள் என்னென்ன?

**Dr. கேரி ஹேபர்மாஸ்** என்ன, பொறுத்தவரையும், ஜான், இந்த 12 உண்மைகளை எப்படி பார்க்கிறேன்னு, கேட்டா அதை, இயேசுவின் வாழ்வில் வெள்ளி முதல் ஞாயிறு வரை நடந்த காரியங்கள், அதில் நான்கு காரியங்களை சொல்கிறேன். சரி, இது குத்துமதிப்பாக சொல்லப்படுகிற எண் ஏன்னா எனக்கு தெரிந்த வரைக்கும் யாரும் இந்த மாதிரி நான்கு என்றெல்லாம் சொன்னது இல்ல. அதாவது, ரூடல்ப் புல்ட்மேன் இயேசுவின் வாழ்வின் கடைசி வாரத்தின் கடைசி பாதியென்று 20 குறிப்புகளை தருகிறார். ஆனா நா என்ன செய்திருக்கேன்னா, இந்த 12 உண்மைகளில் நான்கு உண்மைகள் 3 விஷயங்களை செய்கிறது என்று நான் நினைக்கிறேன். முதலாவதாக, இந்த உண்மைகளும் 12 உண்மைகளில் இருக்கும் வேறு சில குறிப்புகள் கூட சொல்ல முடியும் ஆனா இந்த நான்கும் இந்த உண்மைகளை சுற்றியுள்ள பின்னணிகளும் முக்கிய இயற்கை விதிகளை தோற்கடித்து மேலோங்கி நிற்பதை காட்டுகிறது. இரண்டாவதாக, இதுல உயிர்த்தெழுதலுக்கான முக்கிய ஆதாரங்கள் இருக்கிறது. மூன்றாவதாக, இது எல்லாத்தையும் குண்டு மணி அளவு இருக்கிற வரலாற்று ஆவணங்களை வைத்து தெரிந்துகொள்கிறோம். அதனால இதுக்கு சுவிசேஷங்கள் இது அதுன்னு எதுவும் தேவையில்லை. இதெல்லாம் பவுலிடமிருந்து பெற்றுகொண்டோம்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** அவை என்ன? அந்த உண்மைகள் என்ன?

**Dr. கேரி ஹேபர்மாஸ்** சரி, முதலாவது என்னன்னா இயேசு சிலுவையின் பாடுகளினால் தான் ஜீவனை இழந்தார். இரண்டாவது, சீஷர்களுக்கு உண்டான அனுபவங்களால் அவர்கள் உயிர்த்தெழுந்த இயேசுவை கண்டதாக விசுவாசித்தார்கள். மூஒன்றாவது, அவர்களுடைய வாழ்க்கை மாறினது,. அவர்கள் முற்றிலும் மாறியிருந்தார்கள். தாங்கள் இயேசுவைத்தான் பார்த்தோம் என்று நம்பிக்கையில் பின்வாங்க வில்லை அவர்கள் உலகத்தையே தலைகீழாக மாற்றிவிட்டார்கள், நான்காவதாக, பவுல் என்ற மனிதன், நாம

பேசினது போல, நாத்திகன், கிறிஸ்தவர்களை கொன்று சிறைபிடிக்கும்படி ஆக்ரோஷமாக இருந்தவன், தனக்கு ஏற்பட்ட அனுபவத்தில் தான் உயிர்த்தெழுந்த இயேசுவை கண்டதாக நம்பினதினால் கிறிஸ்துவை ஏற்றுகொள்கிறான்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட், இப்ப, டோனி உங்ககிட்ட கேட்கிறேன் நீங்க சொன்னீங்கள, "ஹே, நீ கிறிஸ்தவனா இல்லைன்னா, இந்த உண்மைகள்ள சிலது..." டோனி அதை, நீங்களே சொல்லுங்க. நீங்க இந்த உண்மைகளை ஏற்றுகொள்கிறீர்களா?

**Dr. ஆண்டனி பிழு** ஆனா, நானும் ஏற்றுகொள்கிறேன். ஆனா இப்படி தத்ரூபமாக காட்சியளிப்பது என்பது. அதாவது, சுவிசேஷங்களில் தாமதமாக பின்னால உள்ள வர்ற தோமாவை குறித்து அதிகமா நினைத்து பார்ப்பேன், உண்மையான மாம்ச சரீர உயிர்த்தெழுதல் இருக்குமான்னு சந்தேகத்தோட இருந்தவர். என்னை பொருத்தவரைக்கும், அவர் உண்மையாகவே அவருடைய விலாவில் கைவிட்டு பார்த்தார் என்று சொல்றது ஒன்னுமே இல்லை... அப்படி பார்க்கனுன்னு மட்டும்தான் சொன்னார் அதுக்கு அப்பறமா இயேசு தோன்றிய போது அந்த சரீரத்தை தொட்டு பார்த்ததை விட அவர் அங்கு வந்ததை உணர்ந்திருந்தார் என்று சொல்லலாம்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** கேரி, நீங்க என்ன நினைகிறீங்க?

**Dr. கேரி ஹேபர்மாஸ்** அப்ப, அவர் தொமாகிட்ட தொட்டு பார்க்க சொல்றாரே. டோனி சரியா சொன்னாரு. தோமா அவரை தொட்டு பார்த்தார் என்று யோவான் நமக்கு சொல்லல. இதுல இன்னொன்றையும் சேர்த்துக்க விரும்புகிறேன்,ஸ் அறியா. இக்னேஷியஸ், யோவான் சுவிசேஷம் எழுதப்பட்டு பத்து வருடங்களுக்கு பிறகு, கிபி 107, இக்னேஷியஸ் அந்த கட்டத்தில் தோமா அவரை தொட்டு பார்த்தார் என்பதாக சொல்லுகிறார். அப்படியும் இருந்திருக்கலாம், சுவிசேஷங்களில் இரண்டு ஸ்திரீகள் இயேசுவை தொட்டதற்கான ஆதாரங்கள் நம்மிடம் இருக்கிறது. ஒரு பெண் மத்தேயு 28:9 ல இயேசுவின் பாதத்தில் தைலத்தை ஊற்றினாள். அதற்கு பிறகு மகதலேனா மரியாள் தனியா கல்லறைக்கு அருகில் இருக்கும்போது அங்கிருந்த தோட்டக்காரரை கவனிக்கும்போது அவரை பார்த்ததும் அவர் இவர்தான் என்று சொல்லி அவரை அடையாளம் காண்கிறாள்., அப்ப அவர் அவகிட்ட, "என்னை தொடாதே என்றார்." இதிலிருந்து மரியாள் அவரை தொட்டிருக்கிறாள் என்பது ஓரளவிற்கு நம்மால புரிந்துகொள்ள முடியும். இங்க இந்த ஸ்திரீ அவரை தொட்டிருக்கிறா. மரியாள் தொட்டிருக்கா. அதனால இக்னேஷியஸ் சொல்றாரு தோமாவும் அவரை தொட்டிருபான்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** அது மட்டுமில்ல, இன்னொரு உண்மை என்னன்னா தோமாவின் கூற்றுகளை நீங்க கணக்குல எடுத்துகிட்டா அதாவது, அவர், நா நம்பல்லன்னு சொல்லியிருக்காரு, இல்லையா? அது இறை நம்பிக்கைக்கு புறம்பானது. நா அவருடைய ஆணி பாயிந்த காயங்களையும் விலாவையும் தொட்டு பார்க்காமல் நம்ப மாட்டேன் என்று சொன்னாரே." சரி, என்னவேனாலும் நடந்திருக்கலாம், அதற்கு பிறகு அவருடைய சாட்சியும் சொல்லபட்டு இருக்கிரர்த்து அவர், என் தேவனே, என் ஆண்டவரே என்றார். அப்ப ஏதோ நடந்திருக்கணும். அது என்னன்னு நினைக்கிறீங்க?

**Dr. ஆண்டனி பிழு** சரி, இதுல வியப்பான விஷயம் என்னன்னா இயேசு என்ன சொல்றாருன்னு கவனிங்களே, “இப்ப நீ என்னை தொட்டதினால், இப்போது விசுவாசித்தாய்.” அப்படியில்லை. என்ன சொல்றாரு நீ கண்டதினால் விசுவாசித்தாய் என்கிறார். இது என்னோடு மனசுல வியப்பானதா தோன்றியது. நா அங்க இருந்தேன் அவரை தோட்டத்தை பார்த்தேன் என்பதை அறிக்கையாக எழுதி காட்டுகிறேன் சாட்சியிடுகிறேன் என்று சொல்றதுல எதுவும் இல்லை...

**Dr. கேரி ஹேபர்மாஸ்** அப்ப அந்த இரண்டு பெண்களை பற்றி என்ன சொல்வீங்க? அந்த ஸ்திரீயும் தனியாக இருட்ன்ஹா மகதலேனா மரியாளும். அவங்க அவரை தொட்டிருப்பாங்கன்னு நினைக்கிறீங்களா?

**Dr. ஆண்டனி பிழு** இது, அவங்க தொட்டாங்கன்னு சொல்கிற ஆதாரங்கள். ஆமா.தொட்டாங்க. ஆனா அவங்க அவரை தொட்டார் என்பதை அவர் தொடப்பாட்டார் என்பதற்கான காரணங்கள் இதுதான்னு முடிவுக்கு வந்திட முடியாது. இதெல்லாம் நடந்தது என்று அவங்க பதிவு செய்திருக்காங்க.

ஆனா சுவிசேஷங்களில் அவரை யாருமே தொட்டது கிடையாது என்றிருந்தா இன்னும் உங்களுடைய குறைபாடுகள் அதிகமா இருந்திருக்குமே.

**Dr. ஆண்டனி பிழு** ஓ, ஆமா, நிச்சயமா.

**Dr. கேரி ஹேபர்மாஸ்** குறைந்த பட்சம் இந்த மூணாவது இருக்குதே ஏன்னா இக்னேஷியஸ் தோமா அவரை தொட்டதாக சொல்றாரு.

**Dr. ஆண்டனி பிழு** ஆமா, ஆனா இதுதான் உண்மையென்று முற்றிலுமா எடுத்துக்க முடியாது. சொல்லப்போனா, நமக்கே ஒருவிஷயம் நல்லா தெரியும்: “கவனத்தை சிதறடிக்கும் தரிசனங்கள் பார்ப்பதைவிட உணர்வு ரீதியானதாக இருக்கும் இல்லையா? அப்படிதானே? அதாவது இதைதான் முதல்ல எல்லாரும் செய்ற விஷயமா இருக்கும் நாம பார்க்கிறது ஒரு தரிசனமா இல்ல இதை மற்றவர்களாலும் பார்க்கவும் தொடவும் முடியுமா இல்லையான்னு யோசிப்பாங்க.

**Dr. கேரி ஹேபர்மாஸ்** சுவிசேஷங்களில் சொல்லப்பட்டிருக்கும் பதிவுகளை நீங்க ஏற்றுகொண்டீங்கன்னா, நான்காவது சுவிசேஷத்தை எழுதியவர்தான் சொல்றாரு, 1 யோவான், மூன்று வசனங்களில் என்ன சொல்றாரு தெரியுமா, “எங்கள் கண்களால் கண்டதும். எங்கள் கைகளால் தொட்டும் இருக்கிறோம். அந்த வார்த்தையை பற்றிகொண்டிருந்தோம்...” அதாவது, யோவான் 1:14ல: “அந்த வார்த்தை மாம்சமாகி என்றிருக்கிறது.” அப்ப யோவான் முதல் நிருபத்திலும் இதை சொல்கிறார். அந்த கட்டுரை உங்களுக்கு பிடிச்சிருக்கா...

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** இங்க அதை உங்களுக்காக வாசிக்கிறேன். ஆறுமுறை ஒன்று யோவான் 1:1-3ல சொல்லியிருக்காரு, “நாங்கள் ஒன்றை பார்த்தோம்.” ஆறுமுறை நாங்கள் அதை கண்டோம் என்கிறார். மேலும் அவர் சொல்கிறார், ஆதிமுதல் இருந்ததும் நாங்கள் கேட்டதும் நாங்கள் கண்டதும் நோக்கி பார்த்ததும் (கிரேக்கத்தில் ஸ்க்ரூடினைஸ்ட்)எங்கள் கைகளினாலே தொட்டதும்.” இது லூக்கால இருக்குன்னு

நினைக்கிறேன், அப்படிதானே, அங்க இயேசு சொல்வாருள்ள, நான் ஆவியா என்று என்னை தொட்டுப்பார் என்பார்.

**Dr. கேரி ஹேபர்மாஸ்** ஆமா. அப்பறம் சாப்பிடுறார்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆமா, அப்ப இந்த ஆதாரங்கள் எல்லாம் அவர் சரீர பிரகாரமாக உயிர்த்தார் என்பதை நிரூபிக்கிறது அதனால முதல்ல இவங்களுக்கு ஒரு அதிர்ச்சியாதா இருந்துச்சு. ஆனா சில அனுபவங்கள் மூலமா அதை புரிஞ்சுகிட்டாங்க கொஞ்சம் கொஞ்சமா தொட்டு பார்த்தாங்க, அதை நோக்கி பார்த்தார்கள், பின்பு அதை பிரகடனம் செய்தார்கள்.

**Dr. ஆண்டனி பிழு** இல்லை, அவங்க உண்மையா அவரை தொட்டு பார்க்கல. ஒருத்தர் சாப்பிடறமாதிரி ஒரு தரிசனத்தை பார்த்திருக்கலாம், அப்படிதானே?

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** இல்லை அவரே சொல்றாரே, நாங்கள் தொட்டு பார்த்தது என்று."

**Dr. கேரி ஹேபர்மாஸ்** சரி, இதற்கு நேரடியான ஒரு பதிலை பார்க்க விரும்பினால் லூக்கா 24:39ல் பாருங்க, இயேசு சொல்கிறார், "நீங்கள் காண்கிறபடி எனக்கு மாம்சமும் எலும்புகளும் உண்டாயிருக்கிறது போல ஒரு ஆவிக்கு இராது."

**Dr. ஆண்டனி பிழு** ஓ, ஆமா.

**Dr. கேரி ஹேபர்மாஸ்** அப்ப அவர் என்ன சொல்றார், "நா ஆவி இல்லை" இதைதான் சுவிசேஷங்களில் இருந்து நேரடியாக பார்க்கிறோம்.

**Dr. ஆண்டனி பிழு** சரி, ஒரு ஆவி தன்னை ஆவி இல்லை என்று சொல்லி கொள்ளுகிறது.

**Dr. கேரி ஹேபர்மாஸ்** அவர் அப்படி சொன்னதால அவர் ஆவி இல்லை, அவர் ஆவியாக இல்லை என்பது தான் இதன் அர்த்தம்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சிலருடைய கருத்து என்னன்னா, கேரி, அவங்க என்ன சொல்றாங்கன்னா, :அதாவது, இந்த உயிர்த்தெழுதல், என்பது தேசமெங்கிலும் உள்ள சபைகள்ள பார்க்கும்போது, அந்த சபையில் உள்ள ஊழியர்கள் இது மரணத்தில் இருந்து இயேசு சரீர பிரகாரமாக உயிர்த்த உயிர்த்தெழுதல் இல்லைன்னு சொல்றாங்க. இதை அவர்கள் மரணத்தில் இருந்து ஆவியில் உயிர்த்தல் என்கிறார்கள். ஏன் அப்படி? இது ஏன் வெறும் ஆவிக்குரிய உயிர்த்தெழுதலா இருக்க கூடாது?

**Dr. கேரி ஹேபர்மாஸ்** சரி, டோனியோட எனக்கு ஆரம்பத்தில் ஒத்துபோகாமல் இருந்தது இந்த கருத்துதான். இன்றைய மேதைகள் என்ன சொல்லுகிறார்கள் என்று கேட்கும்போது இந்த அறிக்கையைத்தான் பலரும் சொல்வதை பார்க்கிறேன். ஆனா இப்போது நா கிட்டத்தட்ட 100 உபகரங்களை வைத்து உயிர்த்தெழுதலை குறித்து 1975 முதல் 2000 வரைக்கும் சொல்லப்பட்ட அறிக்கைகளை ஆய்வு செய்து விமர்சகவாதிகள் என்ன சொல்கிறார்கள் என்பதை ஆராய்ந்து வருகிறேன். பெரும்பாலான மேதைகள் ஏதோவொன்று நடந்திருக்கிறது என்று நம்புகிறார்கள். சீஷர்களுக்கு உண்மையான

உயிர்த்தெழுந்த இயேசுவை அவர்கள் தரிசித்ததாக நம்பினார்கள். பெரும்பாலான மேதைகள் சீஷர்கள் உண்மையில் எதையோ பார்த்தார்கள் என நம்புகிறார்கள். உண்மையான அனுபவங்கள் உண்டாயிருந்தது. ஆனா மேதைகளில் பெரும்பாலானவர்கள் ஏற்றுகொள்கிறார்கள்; அவர்களில் சிலர் இயேசுதான் தோன்றினார் என்கிறார்கள், ஆனா அவனாக மாம்ச சரீரத்தை பற்றி ஒன்னும் பேசாம அமைதியாயிடுறாங்க, ஏன்னு தெரியல, இத நானாதா சொல்றேன் ஆனா ஒருவேளை அது ஒரு பிரம்மையின் தோற்றம் என்று அவங்க நினைக்கிறாங்களோ என்னவோ. அதனால இன்றைக்கு இறை நம்பிக்கை இல்லாதவர்கள் உங்களுக்கும் எனக்கும் இடையில் ஏதோவொரு கட்டத்துல தான் நின்னுட்டு இருக்காங்கன்னு சொல்வேன்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** பொதுவாக ஜனங்கள் பிரயோகிக்கும் இன்னொரு காரியம், “ஹே, பவுல் ஆவிக்குரிய என்ற வார்த்தையை தான் 1 கொரிந்தியர் 15ல் கூறியிருக்கிறார். அப்ப அவர் ஆவிக்குரிய நிலையை குறிப்பிடுகிறாரா அல்லது ஏதோ சல்லடை போன்ற ஒரு உருவத்தை பற்றி சொல்லுகிறாரா? அல்லது அது சரீரபிரகாரமான உயிர்த்தெழுதலா? இந்த வார்த்தைகளுக்கான அர்த்தம் என்ன?

**Dr. கேரி ஹேபர்மாஸ்** இது நமக்கு ரொம்ப கடினம் ஏன்னா நாம அதைதான் விசுவாசிக்கிறோம், நாம இங்க சுவிசேஷங்களில் இருந்து நிறைய விஷயங்களை பார்த்திருந்தாலும், இது எல்லாத்துக்கும் மேல பவுல்தான் சிறந்த ஆதாரம் என்று சொல்வோம்.

**Dr. ஆண்டனி பிழூ** சரிதான்.

**Dr. கேரி ஹேபர்மாஸ்** அவர்தான் ஒரே சாட்சி இதைதான் இன்றைக்கு எல்லாருமே சொல்லீட்டு இருக்காங்க. பவுல் உயிர்த்தெழுந்த சரீரத்தை குறித்து நினைப்பது வியப்பாக இருக்கு. இப்ப, உதாரணாமா சொல்லன்னுன்னா, 1 கொரிந்தியர் 15. ஆவி என்பதற்கு ஒரு கிரேக்க வார்த்தை இருக்குது: நியூமா. இந்த வார்த்தையை பவுல் பயன்படுத்தல. அவர் சொல்றது, “ ஆவிக்குரிய சரீரம்”. அப்ப அங்க அயேதோ ஒரு மாற்றம் நடக்குதுன்னு நினைக்கிறன், ஆனா இங்க இருக்கிறது ஒரு மாம்ச சரீரம் தான். நா முன்னாடி சொன்னதை விளக்கி சொல்றேன், இயேசு ஆவியில் தோன்றியதாக பவுல் கூறுகிறார் என்று எடுத்துகொள்ள மாட்டேன். இதுக்கு சான்றாக இன்றைக்கு பவுலின் நிருபங்களில் விமர்சகர்களால ஏற்றுகொள்ளபடும் புத்தகம் எதுன்னு எங்கிட்ட கேட்டீங்கன்னா, அது பிலிப்பியர். இருந்தாலும், விமர்சகர்கள் பெரும்பாலும் ஏற்றுகொள்வது ரோமர், 1, 2, கொரிந்தியர், கலாத்தியர் மற்றும் பிலிப்பியர். G. A. வேல்ஸ், இவர் வந்து கிட்டத்தட்ட, சரியா சொன்னா, டோனிக்கு அடுத்ததாக, இவர் பவுலின் எட்டு உண்மைகளை ஏற்றுகொள்கிறார். அந்த ஐந்தையும் மற்ற மூன்றையும் ஒத்துகொல்லுகிறார். இது பிலிப்பியர் 3ல இருக்கு...

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** இதோடு நாம் நிறுத்திடலாம் இப்போது ஒரு சிறிய இடைவேளைக்கான நேரம் நாம் மீண்டும் வந்ததும் இது ஏன் ஆவிக்குரிய உயிர்த்தெழுதல் இல்லை என்ற காரணங்களை பார்க்கலாம், இது சரீரபிரகாரமான உயிர்த்தெழுதல் தானா. தொடர்ந்து இணைந்திருங்கள்.

****

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட். மீண்டும் வருக. தொடர்ந்து இணைந்திருபதர்காக நன்றி. நம்முடன் Dr. கேரி ஹேர்பர்மஸ் மற்றும் Dr. ஆண்ட னி ப்ளூ இருகிறார்கள். ஒரு கேள்வியை விவாதித்து கொண்டு இருக்கிறோம், இயேசு மரணத்தில் இருந்து உயிர்த்தாரா? இப்ப நம்முடைய கேள்வி இதுதான், அது எப்படிப்பட்ட உயிர்த்தெழுதல்? இயேசு மரணத்தில் இருந்து உயிர்த்தார் என்று சொல்வீர்களானால், எப்படிப்பட்ட சரீரம் அவருக்கு உண்டாயிருந்தது? அது ஆவிக்குரிய சரீரமா? அதற்கு என்ன அர்த்தம்? அது மாம்ச சரீரமா? என்ன நடந்தது?

**Dr. கேரி ஹேபர்மாஸ்** நா முதல்ல சொன்ன மாதிரி, இங்க பவுலை பத்தி சொல்வது சரியா இருக்குன்னு நினைக்கிறேன் ஏன்னா பவுலோட பதிவுகளை எல்லாரும் ஏத்துக்குறாங்க. ஒவ்வொரு விமர்சகரும் பவுலோட சாட்சி பதிவுகளை தவிர வேறு எதுவுமே இல்லைன்னு சொல்றாங்க. பவுல் தமஸ்குவுக்கு போற வழியில என்ன பார்த்ததாக நினைக்கிறாரு என்ற விஷயம் ரொம்ப முக்கியமானது. அதுக்கு முன்னால 1 கொரிந்தியர் 15 வரதுக்கு முன்னாலா அவர் நியூமா என்ற வார்த்தையை தெரிந்திருப்பாரோ அப்படி இல்லை. அவர் ஆவிக்குரிய என்று தான் சொல்கிறார், "அதை விவரிக்கும் பதத்தை சொல்கிறார். ஆனா அவர் "சோமா" சரீரம் என்கிறார். பிலிப்பியர் 3: சின்ன அதிகாரம்தான். 21 வசனங்கள் தான் இருக்கு. சரீர உயிர்த்தெழுதலை குறித்து சொல்லும் 3 காரியங்களை பற்றி இந்த ஒரு அதிகாரத்தில் பவுல் பேசுகிறார். முதல் சில வசனங்களில் சொல்லுகிறார், "நா எபிரேயரில் பிறந்த எபிரேயன் பிரமாணங்களை நன்கு அறிந்தவன், அதாவது தன்னை
பரிசேயன் என்கிறார்."

இப்ப, இதிலிருந்தே நல்லா தெயர்யுது பரிசேயர்கள் சரீர உயிர்த்தெழுதலை நம்புகிறவர்கள். உண்மையில், அப்போஸ்தலர் 23ன் படி, பவுல் கொல்லப்படுவதை தடுக்கும்படி ரோமர்களால் சிறைபிடிக்கப்பட்டு கொண்டு போகப்படுகிறார், அவர் சத்தமிட்டு அங்கிருந்த மக்களை பார்த்து பேசுகிறார், "எதற்காக என்னை கொண்டு போகிறீர்கள்? நான் மரித்தோரின் உயிர்த்தெழுதல் உண்டென்று விசுவாசிக்கிறேன் என்பதனாலே? இது தத்ரூபமான உயிர்த்தெழுதலை குறிக்கிறது. பரிசேயர்கள் சொன்னார்கள், " இந்த மனிதனிடம் எந்த குற்றமும் இல்லையே." ஆனா சதுசேயர்களுக்கு அது சுத்தமா பிடிக்கல. அதனால ஒரு பரிசேயனாக, அவர் பரிசேர்யர்களின் கருத்துக்கு இணக்கமாக இருந்தார். பிளிப்பியரில் 3ல் இருந்து கிடைத்த முதல் ஆதாரம், ஒரு பரிசேயனாக, சரீர உயிர்த்தெழுதலை இவர் விசுவாசித்தார்.

இரண்டாவதாக, வசனம் 11ல் சொல்கிறார், "எப்படியாயினும் நான் மரித்தோரிலிருந்து உயிரோடு எழுந்திருப்பதற்கு தகுதியாகும்படி." இப்ப, உயிர்த்தெழுதல் என்பதற்கான கிரேக்க வார்த்தை அனஸ்தாசிஸ் ஆனா இந்த பகுதியில், பிலிப்பியர் 3:11, இவர் முன் குறிப்பை பயன்படுத்துகிறார், ஏக் அனஸ்தாசிஸ். ஏக் ஆனந்ச்டாசிஸ், எனக்கு தெரிந்தவரை கிரேக்க மேதைகள் கருத்துப்படி, இந்த பகுதியை மொழிபெயர்த்து பார்த்தால், "மரித்தவர்களில் இருந்து உயிர்த்தெழுந்த வெளியே வர என்றிருக்கிறது." பவுல் சொல்லுகிறார், "நான் மரித்தோரிலிருந்து உயிரோடு எழும்பும்படியாக." இப்ப, ஒரு யூதனுக்கு, "உயிர்த்தெழுந்து வருதல்" என்றால் "கீழ என்ன போகுதோ அது அப்படியே மேல எழும்பி வரனும்." மரணத்தில் இருந்து வெளியே வரணும். அடுத்து ஒருசில

வசனங்களுக்கு பிறகு, பிலிப்பியர் 3:20-21ல் சொல்லுகிறார், “பரலோகத்தில் இருந்து இயேசு வார எதிர்பார்த்துக்கொண்டு இருக்கிறோம் அவர் நம்முடைய அற்பமான சோமாவை (சரீரத்தை) அவருடைய மகிமையின் சோமாவை (சரீரத்தை) போல மருரூபமாக்கிடுவார் இன்னொரு கண்ணோட்டத்துல பார்க்கும்போது அவர் இங்க நியூமான்னு தா சொல்லியிருக்கணும். அவர் ஒரு பரிசேயர். சரீர பிரகாரமான உயிர்த்தெழுதல். ஏக் ஆனஸ்ட்டாசிஸ். மரித்தவர்கள் மத்தியில் இருந்து உயிரோடு எழுந்திருக்குதல்.”

மூன்றாவதாக அவர் சொல்லுகிறார், “அவருடைய சரீரத்தை போல ஆகும்படிநம்முடைய சரீரத்தை மாற்றீடுவார்.” அதனால இங்க பிலிப்பியர் 3 ல  தமஸ்கூவுக்கு போகிற வழியில் பவுலுக்கு தரிசனமானது இயேசுவினுடைய ஆவியாக இருந்திருக்கும் என்று சொன்னால் அது பவுலின் பதிவுகளுக்கு மாறானதாக இருக்கும்.

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** டோனி, நீங்க ரொம்ப அன்பான ஒரு நபர் அதோடு நீங்க ஒரு ஆராய்ந்து கற்றுகொள்ளும் அனுபவமுடையவர். அதாவது, நீங்க ஆதாரங்களை பின்தொடர்ந்து பார்க்கிறீர்கள். இந்த ஆதாரங்களை வைத்து என்ன செய்வீங்க?

**Dr. ஆண்டனி பிழு** சரி, இதுல ஆவிக்குரிய சரீரம் என்பது என்னை பொறுத்தவரை ஒரு அரிதான விஷயமாக இருக்குது, சொல்லபோனா, நீங்க ஓர் விஷயத்தை ஆவிக்குரியது என்று சொல்லும்போது அது அது ஒரு பொருட்டல்ல என்று சொல்றீங்க. அது ஒரு பொருளல்ல என்று சொல்லும்போது, அதற்கு யென குணாதிசயங்கள் இருக்கிறது என்று உங்களுக்கு தெரியாது என்று சொல்வது போல இருக்குது. ஒரு பொருளாக கருதப்படாத எதுவும் ஒரு பொருட்டாக எடுத்துக்கொள்ளப்படுவதை இல்லை. ஆவிக்குரிய சரீரம் என்பது என்னை பொருத்தவரைக்கும் ஒரு சரீரமே கிடையாது.

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** ஆல்ரைட், உங்களை ஒரு கேள்வி கேட்க நினைக்கிறேன்.. வேதாகமம் ஆவிக்குரிய புத்தகம் என்று சொல்வேனானால், அது ஒரு சாதாரண பொருள் அல்ல என்று அர்த்தமாகிடுமா?

**Dr. ஆண்டனி பிழு** இல்லை.

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** சரி, ஆவிக்குரிய சரீரமாகவும் மாம்ச சரீரமாகவும் இருக்க முடியுமா?

**Dr. ஆண்டனி பிழு** அது, ஒருவேளை ஆவிக்குரிய மனிதன் என்று நீங்கள் சொல்லுகிற ஒருவருடைய சரீரமாக இருக்கலாம்.

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** கேரி?

**Dr. கேரி ஹேபர்மாஸ்** அவர் சொன்னது சரிதான். இதை ஆண்டோலாகிகள் கமென்ட் என்கிறோம், இது சுபாவத்தினால் சொல்லப்படுவது அல்ல. இருந்தாலும், இங்க இருக்கிற பிரட்சனை என்னவென்றால் இந்த பதத்தை பாருங்கள், “ஆவிக்குரிய சரீரம்” 20

நூற்றாண்டுகள் ஆய்வு கண்ணோட்ட்டங்களில் பார்க்கும்போது, பவுல் தான் எதை ஆவிக்குரிய சரீரம் என்று விளக்கி சொல்கிறார் என நினைக்கிறேன்.  பிலிப்பியர் 3ள் இருந்தே அவர் என்ன சொல்கிறார் என்று பார்க்கிறோம், “நான் பரிசேயன் அதினால்

உயிர்த்தெழுதலை நம்புகிறேன்." 2) ஏக் அநாஸ்தாசிஸ்" மரித்தோரில் இருந்து எழுந்திருந்தால். மடுத்து 3)அதை அவர் என்னுடைய இந்த சரீரத்தை அவருடையதை போல மாற்றுவார் என்று கூறுகிறார். இங்க ஒரு மகிமையின் சரீரம் வருது, ஆவிக்குரிய சரீரம் இல்லை, பிலிப்பியர் 3:20-21, அது மகிமையின் சரீரம். சரி இங்கு சரீரத்தோடு

வேறொன்றும் இணைந்து இருக்கிறது. ஒரு சரீரத்தை விட மேலான மகிமை என்று தான் நினைக்கிறேன். இங்கிருக்கிற பிரச்சனை என்னவென்றால் இந்த ஆவிக்குரிய சரீரம் என்ற வார்த்தை 20 நூற்றாண்டுகளாக எபப்டி பார்க்கபப்ட்டு வருகிறது. இங்க பிரட்சனை

என்னவென்றால், இது பிலிப்பியர் 3 சாதாரண ஆவி இல்லை என்பதில் பவுல் தெளிவாக இருக்கிறாரா, அவர் தான் சொல்லுகிறது இதுதானா என்று தெளிவாக இருந்தால் இது எப்படிப்பட்ட சரீரம் என்ற பிரச்சனை நமக்கு இருக்க வாய்ப்பிருக்காது. நான் பிலிப்பியர் 3ஆஅம் அதிகாரத்தை 1 கொரிந்தியர் 15ன் ஒத்த வசன குறிப்பபாக எடுத்துகொள்கிறேன்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** கேரி, இதுவரைக்கும் இந்த ஆதாரங்களுக்கான புத்தி சார்ந்த விவாதங்களை பார்த்தோம். ஆனா, இதை தனிப்பட்ட நிலையில் வைத்து கேட்க்க விரும்புகிறேன், டோனி, தப்பா நினைக்க மாட்டீங்கள்ள. கேரி என்ன சொல்ல விரும்புகிறார் என்று கேட்கலாம். 1995ல், உங்க மனைவி டேப்பி, எனக்கு தெரியும் உங்களுடைய மாணவர்கள் பலர் சொல்லியிருப்பதை கடிதத்தில் எழுதியிருப்பதை பார்த்திருக்கிறேன், நீங்க இரண்டு பேரும் பரலோகத்தில் நிச்சயிக்கப்பட்ட தம்பதியினர் என்றிருக்கிறார்கள், இருந்தாலும் அவங்க தன்னுடைய நாற்பதாவது வயது வருவதற்கு முன்பு என்ன நடந்தது?

**Dr. கேரி ஹேபர்மாஸ்** வயிற்று புற்றுநோய். ஆமா, டோனி என்னுடைய வீட்டில் 1985ல் இருந்தார் நேற்றைக்கு தான் நாங்கள் இதை பற்றி பேசிக்கொண்டு இருந்தோம் ஏன்னா அவருக்கு இது எப்படி நடந்துதுன்னு தேயாது. என்னுடைய மனைவி 1995 ஆம் ஆண்டு கோடைகாலத்தில் வயிற்று புற்றுநோயினால் மரித்துவிட்டால். அப்ப, அதாவது, என்னுடைய முதல் எண்ணம் – நீங்க சொன்னதுபோல முதல்ல நாத்திகனா இருந்தேன் – எனக்குள்ள நானே சிந்திக்க துவங்கினேன், "ஓ, இல்ல. இப்ப மறுபடியும் ஒரு சந்தேகம் எழும்பியது. அப்படி இருந்ததே கிடையாது. ஒரு பட்டம் பெற்ற மாணவர் இருந்தார், இப்போது அவர் எங்கள் ஊழியர், ஒருமுறை அவர் என்னை அழைத்து என்னிடம் சொன்னார், "உயிர்த்தெழுதல் என்று ஒன்று இல்லாவிட்டால் நீங்கள் இப்போது எங்கு இருந்திருப்பீர்கள்?

என்னை பொறுத்தவரை, பவுல் வியாகுலபடுபவர்களுக்கு சொல்கிறார், அழுகும் கிறிஸ்தவர்கள், "நம்பிக்கை அற்றவர்களை போல நாம் இல்லை,1தெச. 4:13 நீங்க நம்பிக்கையோடு அழறீங்களா நம்பிக்கை இல்லாம அழறீங்களா என்ற பெரிய வித்தியாசத்தை நம்மால் புரிந்துகொள்ள் முடியும். நமக்கு பிரியன்மானவர்களை இழக்கும்போது எல்லாரும் வருந்துகிறோம், எனக்கு, உயிர்த்தெழுதல் இருக்கும் என்ற நம்பிக்கையோடு ஏன் மனைவிக்காக அழுவதும் உயிர்த்தெழுதலின் நம்பிக்கை இல்லாமல் என் மனைவிக்காக கதறுவதும் இரண்டிற்கும் பெரிய வித்தியாசம் இருக்கிறது.

அதனாலதான், இந்த கேள்விக்கு 1995ள் பதில் சொல்லும்போது இப்படி சொன்னேன்: இந்த உலகத்தில் தேவன் இயேசுவை மரணத்தில் இருந்து உயிர்த்தார் என்றால், கிபி 30 அது உண்மையானதாக இருந்திருந்தால், 1995ற்கும் இது உண்மையாக தான் இருக்கும், அதை தான் சார்ந்திருக்கிறேன். எனக்கு பதில் தெரியல. வலிக்கும் வேதனைக்கும் உள்ள விடை எனக்கு தேராது. எனக்கு நாத்திகராக இருக்கேனா இல்லையான்னு எனக்கு யாரையும் தெரியாது. வேதனை வலி என்பதற்கு யாருக்கும் பஹ்டில் தெரியாது ஆனா உயிர்த்தெழுதல் என்று ஒன்று இருக்கும்போது, அது எனக்கு ஒரு அர்த்தத்தை உண்டாக்கி தந்தது ஏன்னா அவளை குறித்து ஒன்றை வெளிபடுத்தியது. அவ எங்க போகிறாள் நான் எங்க போக போகிறேன் என்ற விஷயங்கள்.

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** அப்ப, ஆவிக்குரிய/ மாம்சீகம், உங்க மனைவியை நீங்க எப்படி பார்ப்பீங்கன்னு எதிர்பார்ப்புடன் இருக்கிறீங்கன்னு, சொல்லுங்க?

**Dr. கேரி ஹேபர்மாஸ்** இப்போது அவர் சரீரம் இல்லாமல் இருக்கிறாள் என நான் நினைக்கிறன், ஆனா நாங்க ஒருவரையொருவர் சந்திக்கும்போது அவளுக்கு சரீரம் கிடைக்கும் என நினைக்கிறேன், என்னைபோலிருப்பாள்

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** சரி, இப்ப இந்த தேகத்தை விட்டு குடிபோகவும் கர்த்தரிடத்தில் குடியிருக்கவும் என்பது எப்ப எப்படி நடக்கும்? 2 கொரிந்தியர் 5:6, 8 இதற்கு என்ன அர்த்தம்?

**Dr. கேரி ஹேபர்மாஸ்** நான் நினைக்கிறேன் மரண நேரத்தில், கர்த்தர் மீண்டும் வருவதற்கு முன்பு, மாம்ச சரீரமில்லாமல் விசுவாசிகள் எல்லாரும் தேவனுடைய பிரசன்னத்தில் இருப்பார்கள். எனக்கு ஒரு நண்பர் இருக்கிறார், ஒரு சித்தாந்த மேதை , பீடர் கிரிப்ட் பாஸ்டன் கல்லூரியில் இருக்கிறார், அவர் சொல்வார் அவருக்கு தெரிந்தவரை பிலாட்டோ, சொன்னது சரிதான் அதற்கு மீறி இல்லை என்பார். பிலாட்டோ ஆவி உடலை நம்புகிறவர். பிலாட்டோ நம்பாத விஷயம் என்னவென்றால் மறுபடியும் ஆவிநிலை சரீரத்தை பெறுவது. ஆர்தடாக்ஸ் யூதர்களும் கிறிஸ்தவர்களும் இதே நம்பிக்கையோடு இருக்கிறார்கள் என நினைக்கிறேன்.

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** ஆல்ரைட், டோனி, இந்த தகவல்களை பற்றி சொல்லுங்க, இன்னும் இந்த கேள்வியைத்தான் விவாதித்துகொண்டு இருக்கிறோம், “இயேசு மரணத்தில் இருந்து உயிர்த்தாரா? சீஷர்கள் ஏதையாவது பார்த்திருந்தால், அது என்னவாக இருந்திருக்கும்? அவங்க கொடுத்த ஆதாரங்கள் சரியா, அது பொய்யானதா?

**Dr. ஆண்டனி பிழூ** ஓ, நிச்சயமா சொல்றே, அப்படியில்லை. ஏன்னா பொய்சொல்றதுல ஒரு நோக்கம் இருக்கும்.

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** அப்ப அதுல பொய்க்கு எந்த இடமும் இல்லை.

**Dr. ஆண்டனி பிழூ** ஆமா, பொய்ன்னா , தவறாக இருக்கும் காரியத்தை சொல்லும் நோக்கத்தோடு சொல்லப்படுவது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** உங்க கருத்து என்ன இந்த நபர்கள் எந்தவித உள்நோக்கமும் இல்லாம அவங்க சொல்ல வந்த காரியங்களை பற்றி மாற்று தகவல்களை கொடுத்துட்டாங்களா?

**Dr. கேரி ஹேபர்மாஸ்** சரி, டோனி ஒரு முக்கியமான குறிப்பை இங்க முன்வைத்தார். நா 12 காரியங்கள் உள்ள பட்டியலில் உள்ள திறவுகோல் காரியங்களை முதலாவது முன்வைத்தேன், சீஷர்களுக்கு உண்டான அனுபவத்தினால் அவர் விசுவாசித்தார்கள் – பொய் சொல்லல ஆனா உயிர்த்தெழுந்த இயேசுவை பார்த்ததாக விசுவாசித்தார்கள். இந்த விவாதத்தின் மைய பகுதி, இதுதான் அந்த கேள்விக்கான பதிலை நாம நெருங்கி கொண்டே இருக்கோன்னு நா நம்புகிறேன், “அவர்கள் என்ன பார்த்தார்கள்?” சீஷர்கள் அது தத்ரூபமான ஒன்று என்றுதான் சொல்கிறார்கள். இப், டோனியின் கண்ணோட்டத்தில், மனபிரம்மை என்றும் இரண்டு விதமான காரியங்கள் என்கிறார், அது ஏதோ வித்தியாசமான ஒன்றாக இருந்தது ஆனா அது வெளிபுறமாக காணப்படாத ஒரு காட்சியாக இருந்திருக்கும் என்று சொல்லுகிறார். இதுல ஒரு பிராட்சனை இருக்குனு நினைக்கிறேன், ஏன்னா பவுல் மன கோளாரினால் பாதிக்க பட்ட ஒருவராக இல்லை சீஷர்கள் மன பிரம்மையால் உண்டான பிராட்சனையோடு இருப்பவர்கள் கிடையாது, இருந்தாலும் அவர்கள் ஏதோவொரு காரியத்தை பார்த்ததாக ஒப்புக்கொள்கிறார்கள், இல்லன்னு சொல்றதுக்கு எந்த சாத்தியமும் இல்லை.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** நீங்க என்ன நினைகிறீங்க, டோனி?

**Dr. ஆண்டனி பிழூ** சரி, நாம வேறு எந்த அனுபவமும் இல்லாத ஒரு காரியத்தை வைத்து இங்க உட்கார்ந்து விவாதித்து கொண்டு இருக்கிறோம், யஎன்னா என்னை பொறுத்தவரை… ஒரு அற்புதம் நடந்தது என்றாள் ஒருவர் எழும்பி நிற்பாடு சாத்தியம், நீங்க ஒரு காரியத்தை செய்வதற்கு முன்பு உங்களுக்கு இருக்கும் நம்பிக்கையின் அடிப்படையில் தான் இருக்கிறது. என்ன்டை போன்ற ஒருவர் ஒரு அற்புதத்தின் மூலம் ஒரு விஷயத்தை நம்புவது என்று சொன்னால், முதல் காரியம் இதுல ஏதாவது ஒரு பிரட்சணை இருக்குனு தெரியும். அந்த அற்புதம் நடந்துதுன்னு நானே சொன்னாலும், அது கண்ணுக்கு முன்னால தெரியிர மாதிரி இருக்கணும். ஆனா, உண்மையில், எருசலேமில் உள்ள யூதர்க்கால் எல்லாரும் ஏதோவொரு விதத்தில் நம்பிக்கை உள்ளவர்களாக இருக்காங்க, சதுசேயராக இருக்கலாம் இல்ல பரிசேயராக இருக்கலாம், ஆனா எதை நம்புகிறார்கள் என்று சொல்லப்படுகிற காரியம் முற்றிலும் மாறுபட்ட ஒன்றாக இருக்குது யஎன்னா அவங்க எல்லாரும் மேசியா வருவார் என்கிற காரியத்தை நம்ப அர்ப்பணித்தவர்களாக இருக்காங்க மேசியா அற்புதங்களை செய்வார் என்ற நம்பிக்கை அவர்களுக்கு அதிகமா இருந்துச்சு. அதனால இதுதான் என்று நம்புவதற்கு அங்கிருந்த ஜனங்களுக்கு அது சாத்தியமாவும் இருந்துச்சு என்றுதான் எனக்கு தோணுது. இப், அதுமட்டுமில்ல, கிறிஸ்தவ விசுவாசிகளுக்கு இதை ஒரு அற்புதம் என்று எடுத்து கொள்வதும் ரொம்ப சாத்தியமாக இருக்கும். ஆனா எனக்கு அப்படி இல்லை.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** இன்னும் நமக்கு 30 நொடிகள் இருக்கிறது. இறுதியாக ஒரு காரியம்.

**Dr. கேரி ஹேபர்மாஸ்** சரி, நீங்க சொன்னத சரியா கேட்டிருக்கேன்னு நினைக்கிறேன், கிறிஸ்த்வர்கள் நிச்சயம் உயிர்த்தெழுதல் என்பதை முற்றிலும் நம்புகிறார்கள்.

**Dr. ஆண்டனி பிழூ** அதுக்கு என்னோட பதிலா கேட்டா ஆம்மானு சொல்வேன்.

**Dr. கேரி ஹேபர்மாஸ்** இது மறுக்க முடியாதது என்பதை ஏற்றுக்கொள்கிறேன் ஆனா ஒரு கனம்பொருந்திய நபர் கனம்பொருந்திய விதத்தில் ஒப்புக்கொள்கிறார் யஎன்னா டோனி கனம்பொருந்திய ஒரு நபர்தான். அவரை எப்போதும் அப்படிதான் நா பார்த்திருக்கிறேன். ஆனா இது சிறந்த ஆதாரம் என்று நினைக்கிறேன், ஏன்னா, நாம ரொம்ப விசேஷமானவங்க, அதற்கு நமக்கு நிறைய காரணங்கள் இருக்கிறது. அத டோனி கிட்டையே கேட்டு தெரிஞ்சுக்கலாம்...

**Dr. ஆண்டனி பிழூ** தேவன் மீது உங்களுக்கு இருக்கும் நம்பிக்கைக்கான காரணம், என்றிடலாம்.

**Dr. கேரி ஹேபர்மாஸ்** சரி, தேவன் மீது நமக்கு இருக்கும் நம்பிக்கைக்கான காரணம். அந்த காரணங்கள் சரியானது இல்லை என்று அவர் நினைப்பதற்கு என்ன காரணம் என்பதை இன்றைக்கு தெரிந்துகொள்ள போறேன்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட், தொடர்ந்து இணைந்திருங்கள். இதை பற்றி இன்னும் அதிகம் பேச இருக்கிறோம். நம்முடைய அடுத்த பகுதியில் நாம் காலியான கல்லறையை குறித்தும் இதனால் என்னவெல்லாம் நடந்தது என்பதையும் பார்க்க இருக்கிறோம். அதை பற்றி அடுத்தவாரம் பார்க்கலாம்.

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம் செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org

@2015 A.T.R.I.